**கவனிக்க.**-18.08.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2034 - 2017 අගෝස්තු මස 25 වැනි සිකුරාදා - 2017.08.25

*2034 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 108 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 110 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால்மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஈ. ஆர். எல். பீ. எடம்பாவல ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1987.08.05 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/ எ/ பிர/ 4463 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான சீன் தோட்டம் எனும் முகவரியில் வசிக்கும் கட்டுபுள்ளே கெதர ரன்ஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கொ/14/1092/87 ஆம் இலக்கத்தின் கீழ் 1987.10.22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமை யாளராக இருக்க விரும்பாத காரணத்தினால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2017.09.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நுவரெலிய நிருவாக மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் உடப்பனை பற்றில்/கோரளையில் உள்ள 468J சீன்கம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கடதொரபிடிய இஹலகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நுவரெலிய நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 61/ 24/ 4 ஆம் இலக்க வெளிக்கள தாளில் - என்பவரால் தயாரிக்கப்பட்டு நு. 1103 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் - என்பவரால் தயாரிக்கப்பட்ட - இரேகை வரைதலில் 10 ஆம் இலக்க காணித்துண்டு என காட்டப்பட்டதும் 0.398 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு. காணியின் பெயர் : சீன் தோட்டம் - வடக்கில் : நு. 1103 வரைப்படத்தில் காணித்துண்டுகள் இலக்கங்கள் 03 மற்றும் 04 ; கிழக்கில்: நு. 1103 வரைப்படத்தில் இல. 26 ; தெற்கில் : நு. 1103 வரைப்படத்தில் இல. 26; மேற்கில் : நு. 1103 வரைபடத்தில் இல. 11.

ஈ. ஆர். எல். பீ. எடம்பாவல,
பிரதேச செயலாளர்,
கொத்மலை .

2017.06.20.

8-737/1

---

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ராஜபக்சகே திலின பிரதீப் சுமனசேகர ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களால் 1997.04.15 ஆந்திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/அகோ/2079 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அம்பகமுவ எனும் முகவரியில் வசிக்கும் சமரகொடி ஆராச்சிலாகே சுனில் புஸ்பரத்ன என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் B/13/151 ஆம் இலக்கத்தின் கீழ் 1997.11.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமை யாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பான ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2017.09.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

நுவரெலிய நிருவாக மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவின் அம்பகமுவ பற்றில்/கோரளையில் உள்ள அம்பகமுவ தகுன கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த

அம்பகமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 7 ஆம் இலக்க வெளிக்கள தாளில் தயாரிக்கப்பட்ட எப்விபி 101 பிற்சேர்க்கை 8 இரேகை வரைதலில் 451 ஆம் இலக்க காணித்துண்டு என காட்டப்பட்டதும் 0.099 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு. காணியின் பெயர் : பிளக்ஸ்டோன் குடியேற்றம் - வடக்கில் : காணித் துண்டிலக்கம் 450 மற்றும் கால்வாய்க்கான ஒதுக்கீடு ; கிழக்கில்: கால்வாய் மற்றும் குடியேறற்பாதை ; தெற்கில் : குடியேற்றப்பாதை ; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 450.

ஆர். டி. பி. சுமனசேகர,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை.

பிரதேச செயலகம்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்தேனை,
2017, யூலை 07.

8-737/2

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் பிரிவின் கீழ், மொ/பி 2112 ஆம் இலக்கத்தைக் கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான அகுணகொலபெலஸ்ஸ எனும் முகவரியில் வசிக்கும் ரத்னாயக வன்னிஆரச்சிகே டியோனிஸ் அப்புஹாமி என்பவருக்கு 1986, மாச்சு 27 ஆந் திகதி வழங்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இந்தப் பற்று நிலம், மொனராகலை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் LDO/ M/ 136/ 16 ஆம் இலக்கத்தின் கீழ் 2011.01.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பற்று நிலத்திற்குச் சட்ட முறையிலான பின்னுரிமையாளர் இல்லை என்பதாலோ அல்லது பின்னுரிமையாளர் இருந்தும், அவர் சட்ட முறையிலான பின்னுரித்து உரிமைக்கு விருப்பம் இல்லாமல் இருப்பதாலோ. பின்னுரிமையாளர் ஒருவரை நியமனம் செய்யப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் ஊவா மாகாண சபையின் தனமல்வில பிரதேசச் செயலகப் பிரிவின் பிரதேச செயலாளராகிய கே. எச். ஏ. கே. நிஷாந்த ஆகிய நான் மேலே சொல்லப்பட்ட அளிப்புப் பத்திரத்தைக் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன். இந்த நடவடிக்கையை எதிர்த்து ஏதும் ஆட்சேபம் இருந்தால் 2017.09.25 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

#### அட்டவணை

மொனராகலை நிருவாக மாவட்டத்தின் தனமல்வில பிரதேச செயலாளர் பிரிவின் சித்தரம பற்றில்/கோரளையில் சூரியஆரை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அகுணகொலபெலெஸ்ஸ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், மொனராகலை அளவீடு அத்தியட்சகர் என அழைக்கப்படும் நில அளவையாளர் நாயகம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு க பு வ 34 என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்படுவதும் - 01 ஏக்கர், 02றூட் , 25 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு. வடக்கில் : 28-119 காணித்துண்டு ; கிழக்கில்: 28-117 காணித்துண்டு ; தெற்கில்: 117-271 காணித்துண்டு ; மேற்கில் : 117-271 காணித்துண்டு.

கே. எச். ஏ. கே. நிசாந்த,
பிரதேச செயலாளர்,
கொத்மலை .

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2017, மாச்சு 03.

8-737/3

---

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 320)

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ், மாண்புமிகு காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரினால், திரு. குமாரசாமி சிவகுமார் அவர்கள், அவரது கடமைகளுக்கு மேலதிகமாக 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கலாநிதி ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகெதமெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017.07.31.

8-744

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/30516
பிரதிக் காணி ஆணையாளாரின்
இல. : இ /7/தீப/ஹிகு/734.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பொலநறுவை மாவட்டம், ஹிகுரன்கொட பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 77, உல்கடுபொத கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உல்கடுபொத எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் F.C.P. பொ 132 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2305 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.0370 ஹெக்டயர் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வதிவிட நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு கல்ஹேனகே பிரேமசிறி காமினி பெரேரா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 2304, 2320;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம 2320, 2319;
தெற்கு : காணித்துண்டு இலக்கம 2319, 2306;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2306, 2307, 2304.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (30) (1995.06.15 தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை** :- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 1995 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தண்டப்பணம் .- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி வதிவிட நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்ததகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் குடும்பத்தினுள் கைமாற்றம் செய்தல் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்;

(ஒ) வீட்டினைக் கட்டுவதற்காக காணி பராதீனப்படுத்தும் போது குறிக்கப்படுகின்ற காலவரையறைக்குள் வீட்டுவேலைகள் பூரணப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்படாத போது நீண்டகாலக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டதாகக் கணிக்கப்படு வதுடன் அரசின் பேரிற்கு மீண்டும் காணி உரிமை மாற்றம் செய்யப்படும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

என். பீ. அமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகெதமெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 25.

08-741

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/40039
மாகாணக் காணி ஆணையாளாரின்
இல. : ப.இ.கொ./களு/6/422.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

களுத்துறை மாவட்டம், மதுகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 759சீ பதுகம நவ ஜனபதய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பதுகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் Ka/MTG/ 06/642 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயர் 0.243 விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை பயிர் செய்யும் நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு திரு. பதிரகே சந்ரபால என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : மு. பி. ஏ. 743 இல் காணித்துண்டு இல. 4, மு. பி. க. 3701 இல் காணித்துண்டு இல. 15 மற்றும் இவ்வரைபடத்தின் காணித்துண்டு இல. பீ ;

கிழக்கு : மு. பி. க. 3701 இல் காணித்துண்டு இல. 15 மற்றும் இவ்வரைபடத்தில் காணித்துண்டு இல. பீ மற்றும் சீ;

தெற்கு : காணித்துண்டு இலக்கம் சீ மற்றும் மு. பி. ஏ. 743 இல் காணித்துண்டு இல. 4;

மேற்கு : மு. பி. ஏ. 743 இல் காணித்துண்டு இல. 4.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது வருடங்கள் (30) (2016.09.27 தொடக்கம் முன்னோக்கி);

**வருடாந்தக் குத்தகை** :- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப் பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% இற்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்செய்யும் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப் படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதி யிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங் களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனை கட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2016.09.27 ஆந்திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. ரீ. எம். ஜயதிலக,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 25.

8-924

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.